**இலங்கை கிரிக்கெட் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கிரிக்கெட்டின் (''இலங்கை கிரிக்கெட்'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கிரிக்கெட்டின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை கிரிக்கெட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட்டின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் ஒவ்வொரு சொத்தினதும் ஆயட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். எனினும், ரூபா 1,270,025,416 கிரயத்திலான ஆதனங்கள், | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான மதிப்பீட்டை நாம் மேற்கொண்டு வருகின்றோம். மதிப்பீடு செய்யப்பட்டு நிர்வாகத்தினால் ஏற்றுக் | ஒவ்வொரு நிதியாண்டில் இறுதியிலும் சொத்துக்கின் பயன்பாட்டு ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதி என்பன மீள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் முழுமையாகத் தேய்மானமிடப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்பாட்டில் உள்ளன. | கொள்ளப்பட்டவுடன் தேவையான பதிவுகள் கணக்குப் புத்தகங்களில் இணைத்துக் கொள்ளப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் தொடர்பான ரூபா 33,955,882 (USD 187,085) ஆன அனுசரணை உரித்திற்காக கிடைக்க வேண்டிய சந்தேகத்திற்குரிய வருமானமானது அந்த அனுசரணை நிறுவனத்திடமிருந்து பெற வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும், குற்றவியல் புலனாய்வுத் துறையால் (சிஐடி) விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இனங்காணப்படாத மீதிகள் ரூபா 5,845,788 ஆனது 2013 முதல் பொது முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அம்மீதிகள் 2019 ஆம் ஆண்டில் கூட நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்படாமலும் சீராக்கப்படாமலும் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. | பொது முற்பணம் ரூபா 5,845,788 ஆனது 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்கொண்டு வரப்பட்ட மீதிகள் என்பதுடன் மற்றும் அறவிட முடியாத மீதிகளை நீக்குவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அட்டவணைப் படுத்துவதற்கு நிறைவேற்றுக்குழு பரிந்துரைத்துள்ளது. | மிகுதிகளை இனங்கண்டு கொள்வதற்கும் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைத் செய்வதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விளையாட்டு அமைச்சினால் நியமிக்கப்பட்ட இடைக்காலக் குழுவின் காலப்பகுதியில் அந்தந்த அதிகாரிகளிடமிருந்து எவ்வித அனுமதியும் கிடைக்காமையினால் ரூபா 26,068,579 பெறுமதியான நான்கு திட்டங்கள் இலங்கை கிரிக்கெட்டால் கைவிடப்பட்டிருந்ததுடன் கைவிடப்பட்ட திட்டங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாமல் தொடர்ந்தும் முடிவுறாத வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட திட்டங்களை நிர்மாணிப்பதற்கு இடைக்காலக் குழுவினால் முடிவு எடுக்கப்பட்டிருந்தும் ஆனால் அவற்றின் ஆட்சிக்காலத்தில் பூரணப்படுத்த முடியவில்லை. பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இடைக்காலக் குழுவினால் தொடங்கப்பட்ட திட்டத்தை மதிப்பீடு செய்தமையுடன் அதற்குரிய அதிகாரிகளிடமிருந்து எவ்வித அனுமதியும் இல்லாமையால் தேவையான அனுமதிகள் கிடைக்கும் வரையில் அத்திட்டங்களை கைவிட வேண்டியிருந்தது. | நிதிககூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கிரிக்கெட்டினால் செய்யப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி மற்றும் பொருளாதார சேவைகள் கட்டண வரிக் கணக்கீடுகளுக்கும் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த சொத்துக்களுக்கும் இடையே ரூபா 46,573,373 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்து வருடத்திற்கான விற்பனையாகிய ரூபா 111,543,451 வட் வரிப் படிவத்தில் பிரகடனப் படுத்தாமையால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) இற்கான பொறுப்பு 8,931,206 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இது வரி ஆலோசகர்களுடன் பேசித் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் ஏதேனும் இருந்தால் 2020 இல் தேவையான மாற்றங்கள் செய்யப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கும் மற்றும் நிதிக் கூற்றுக்களில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| இலங்கைப் பொறியியல் கூட்டுத் தாபனத்திற்கு செலுத்த வேண்டியவை | 258,347,662 | 147,362,669 | 110,984,993 | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் இணங்காத மீதிகளை இனங்கண்டு சீராக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பெற வேண்டிய 03 மீதிகள் | 68,038,113 | மீதி உறுதிப்படுத்தல்கள் | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக கிடைக்க வேண்டிய மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் | 143,404,077 | மீதி உறுதிப்படுத்தல்கள் | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் தொடர்பான உறுதிப் படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய 05 மீதிகள் | 105,880,318 | மீதி உறுதிப்படுத்தல்கள் | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப்படுத்த செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) அட்டுறு செலவினங்கள் | 18,857,016 | விரிவான அட்டவணைகள் | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 471,133,388 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 2,259,301,564 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,730,434,952 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 2,978,116,352 ஆல் குறைவடைந்தமை அந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கண்டி கட்டுகஸ்தோட்டையில் அமைந்துள்ள 256 பேர்ச் அளவான வலகும்புறவத்த எனும் பெயருடைய காணி ஒன்று கிரிக்கெட் வளாகமொன்றை நிறுவுவதற்கு இலங்கை கிரிக்கெட்டினால் 30 ஆண்டுகள் குத்தகைக்கு 2017 ஏப்ரல் 29 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் 30 ஆண்டுகளுக்காகச் செலுத்த வேண்டிய குத்தகைக் கட்டணம் ரூபா 26.25 மில்லியன் ஆகும். அதற்கு மேலதிகமாக ரூபா 25 மில்லியன் தொகை நன்கொடையாக அக்காணியின் குத்தகை தாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், கிரிக்கெட் வளாகத்தின் நிர்மாணம் சம்பந்தமான தொடக்க மற்றும் முடிவு திகதிகள் குறித்து எவ்வித தகவலும் சமர்ப்பிக்கப்படவில்லை. | கட்டிடத்திற்கான விண்ணப்பம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (UDA) சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் அனுமதி கிடைக்கப் பெற்றதும் கட்டிட நிர்மாணத்தினை தொடங்க முடியுமாக இருக்கும். | கிரிக்கெட் வளாகத்தின் நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒக்தோபர் 2018 இனுள் கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணத்தினை முடிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் 17 ஆகஸ்ட் 2017 அன்று வழங்கப்பட்ட தேசிய கிரிக்கெட் மைதானம் மற்றும் ஒரு பல்ரக விளையாட்டுத் தொகுதி கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாணமானது பொலன்னறுவை ஹிங்குராங்கொடவில் சர்வதேச அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன் 31 திசெம்பர் 2019 அளவில் ரூபா 132,088,862 செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும் கிரிக்கெட் அரங்கம் மற்றும் பெவிலியன் என்பவற்றின் நிர்மாணங்களிற்கான திட்டங்களுக்கான தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய இரு நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் 10 ஏக்கர் காணிக்கான உறுதிப்பத்திரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், அரங்கத்தின் நீர்ப்பாசன முறை தொடர்பான குழாய்கள் வடிகால் அமைப்புடன் இணைக்கப்படவில்லை. மற்றும் அடையக்கூடிய சாலை மற்றும் அரங்கத்தின் பாதுகாப்பு வேலி என்பன நிறுவப்படவில்லை. குறிப்பிட்ட காணிக்கு உரிமை இல்லாமையால் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக ஒப்பந்த வேலைகள் தொடங்குவதில் ஒரு குறிப்பிடத்தக்க தாமதம் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணம் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தம் 17/08/2017 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணத்தைத் தொடங்குவதற்காக 31/05/2018 இல் காணி ஒப்படைக்கப் பட்டிருந்தது. இத்திட்டத்திற்கான காலதாமதம் நிறைவேற்றுக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 22/02/2019 இல் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ஒப்பந்த இலக்கம் 1 ஆனது 100% முடிக்கப்பட்டதுடன் ஒப்பந்த இலக்கம் 4 ஆனது 75% ஆன அளவில் முடிவடைந்துள்ளது என்பதுடன் முழுத் திட்டமும் 31/08/2020 அளவில் முடிக்கப்படல் வேண்டும். | தேசிய கிரிக்கெட் அரங்கம் மற்றும் பல்ரக விளையாட்டுத் தொகுதிக் கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாணத்தைப் பூரணப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் அரசப் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட்டிற்கான 2019 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்த கொள்வனவு சம்பந்தமான ஒரு பரந்த திட்டம் எங்களிடம் உள்ளது என்பதுடன் சுற்றுப் பயணங்கள் மற்றும் போட்டிகளை மாற்றியமைப்பதனால் அது தொடர்ந்தும் மாறுகின்றது. உண்மையான தேவைகளின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும். | பெறுகைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 36,360,500 செலவிடப்பட்டு இருபத்தைந்து ஒற்றை டிரம்ஸ் 01 டொன் இயந்திர மயமாக்கப்பட்ட ரோலர் கொள்வனவு செய்யப்பட்டது. எனினும், கொள்வனவிற்கு முன்னர் பயனாளிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் நிதித்திறன் மற்றும் வழங்கல் சாத்தியத்தை மதிப்பீடு செய்யாது முன்னைய 3 ஆண்டுகளில் எந்தவொரு பெரிய வருமானத்தையும் அறிக்கையிடாத ஒரு பொறியியல் ஆலோசனை சேவை நிறுவனம் மூலம் இக்கொள்வனவு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட விபரக் குறிப்புக்களுடன் சரிபார்க்கப்பட்டு இந்த இயந்திரங்கள் இலங்கை கிரிக்கெட்டால் முறையாக கையேற்கப்படவில்லை. | கிரிக்கெட் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்கும் 5 பதிவு செய்யப்பட்ட வழங்கல் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டதுடன் 5 நிறுவனங்களில் 4 பேர் பதிலளித்துள்ளனர். தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் தேவையான விபரக் குறிப்புக்களுடன் இணங்கிய குறைந்த விலை மனுதாரருக்கு டென்டர் வழங்கப்பட்டது. இது டென்டர் சபையின் முகாமைத்துவக் குழு மற்றும் நிறைவேற்றுக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. | பெறுகை நடைமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படல் வேண்டும். |